சுற்றறிக்கை இலக்கம் :- PRE/2024/16

**TR - 02**

மிக முக்கியம்

எனது இல.:-TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, ராஜகிரிய.
2024.07.28

**அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள்,**
**பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்,**


**சனாதிபதித் தேர்தல் - 2024**

**பொது 231 எரிபொருள் கட்டளைகள் ஊடாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலின் ஆரம்ப ஏற்பாட்டு அலுவல்களில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு மற்றும் தேர்தலின்போது வாக்கெடுப்பு நிலையங்களின் பணியாட்குழுவின் போக்குவரத்து மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் அரசாங்க வாகனங்களுக்கு கடன் வசதிகளின் கீழ் பொது 231 எரிபொருள் கட்டளைகள் ஊடாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது கீழ் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கயைம நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

I. தேவையான எரிபொருள் கட்டளை புத்தகங்களை தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்போது தேவை தொடர்பாக முன்னரே கவனத்திற்கொண்டு தேவையான அளவு எரிபொருள் கட்டளை புத்தகங்களை மாத்திரம் பெறுகைகள் பிரிவிலிருந்து எழுத்து மூலக் கோரிக்கையை விடுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

II. அனைத்து எரிபொருள் கட்டளை புத்தகங்களின் சகல கட்டளைப் பத்திரங்களிலும் கீழுள்ள பிரகாரம் தயாரித்துக்கொள்ளப்பட்ட இறப்பர் முத்திரையைப் பதித்தல் வேண்டும்.




III. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் எரிபொருள் கட்டளை புத்தகங்களை முறையாக பதிவேடொன்றில் பதிந்து பதிவேட்டின் தொடரிலக்கத்திற்கமைய புத்தகங்களை வழங்குதல் மற்றும் பொறுப்பேற்றல்.

IV. பல கட்டளை புத்தகங்களை ஒரே தடவையில் பயன்படுத்தாதிருத்தல் மற்றும் ஒரு புத்தகம் முடிவடைந்ததன் பின்னர் அடுத்த புத்தகத்தைப் பயன்படுத்தல்.

V. எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றை சாரதிகள் ஊடாக பூரணப்படுத்திக்கொள்ளல். (இணைப்பு - V - 2)

VI. நிறைவேற்றப்படவிருக்கும் கடமைக்குப் போதுமானளவு எரிபொருளை மாத்திரம் கணக்கிட்டுப் பெற்றுக்கொடுத்தல். (ஒருபோதும் தேவையற்ற விதத்தில் எரிபொருளை வழங்குவதனை தவிர்த்தல் வேண்டும்.)

VII. முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஓட்டக் குறிப்புக்களை (Running Chart) சீர்செய்து (சமநிலைப்படுத்தி) முன்வைக்குமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தவும்.

VIII. எரிபொருளை வழங்குவதற்காக பதிவேடொன்றை பேணி வரவேண்டுமென்பதுடன் தேவையான விபரங்கள் அதில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்களில் கீழ் குறிப்பிடப்படும் தகவல்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். எதிர்கால கணக்காய்வு அலுவல்களின்போது இந்தப் பதிவேடு அவசியமாக இருப்பதனால் வாக்கெடுப்பு முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் இந்தப் பதிவேட்டை பிரதி / உதவி தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**எரிபொருள் வழங்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும் பதிவேட்டில் குறித்துக்கொள்ள வேண்டிய குறிப்புக்கள் பற்றிய மாதிரி**

1. வாகனத்தின் இலக்கம்
2. வாகனம் உரித்துடைய நிறுவனம் மற்றும் முகவரி
3. சாரதியின் பெயர்
4. எரிபொருள் கட்டளையின் இலக்கம்
5. எரிபொருள் வகை (டீசல் / பெற்றோல் )
6. வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு
7. எஞ்சின் ஒயில் / பிரேக் ஒயில் வழங்கப்பட்டது பற்றி
8. எரிபொருள் கட்டளையில் கையொப்பமிடும் பதவிநிலை அலுவலரின் சிறு கையொப்பம் மற்றும் திகதி
9. எரிபொருள் கட்டளையைப் பெற்றுக்கொண்ட சாரதியின் கையொப்பம்
10. எரிபொருள் கட்டளையைப் பூரணப்படுத்திய அலுவலரின் சிறு கையொப்பம்

02). எரிபொருள் கட்டளையில் கையொப்பமிடும் அலுவலை இரண்டு அல்லது மூன்று அலுவலருக்கு மாத்திரம் வரையறை செய்யுங்கள். அவ்வாறு எரிபொருள் கட்டளைகளில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள், உத்தியோகபூர்வப் பதவிப் பெயர், கடமை முகவரிகள் மற்றும் மாதிரிக் கையொப்பங்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு நேர காலத்துடன் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். எரிபொருள் கட்டளைகளில் கையொப்பத்தையிடும் அந்த அலுவலர்கள் பற்றிய விபரத்தை அலுவலகக் கோவையில் பாதுகாப்பாகப் பேணி வருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

03). இவ்வாறு கட்டளைகள் ஊடாக வழங்கப்படும் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக வாகனத்தின் சாரதியுடன் முகாமைத்துவ உதவியாளரொருவர் அல்லது வேறு பொருத்தமான அலுவலரொருவரை அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட அலுவலரின் முன்னிலையில் வாகனத்தின் எரிபொருள் தாங்கிக்கு எரிபொருள் நிரப்பப்பட்டதாக கட்டளையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பொன்றை இட வேண்டுமென்பதுடன் அந்தக் குறிப்பை கீழுள்ள மாதிரிக்கமைய இறப்பர் முத்திரையொன்றின் மூலம் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **என் முன்னிலையில்.......................... ஆம் இலக்க வாகனத்தின் எரிபொருள் தாங்கிக்கு ............ லீட்டர் பெற்றோல் / டீசல் எரிபொருள் நிரப்பப்பட்டது.** | | |
| **மைலோ மீட்டரின் வாசிப்பு:** | | |
| ...................... | ............................. | .......................... |
| **திகதி** | **நேரம்** | **கையொப்பம்** |

04. குழாம் வாகனங்களுக்குப் (Pool Vehicles) போன்றே அலுவலர்களால் தேர்தல் கடமைகளுக்காக கொண்டுவரப்படும் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் (Assigned Vehicles) எரிபொருள் வழங்கப்படும்போது இந்த ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென தயவுடன் கவனத்திற்கொள்ளவும்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

**பிரதிகள் :**
01. கணக்காய்வாளர் தலைமை அதிபதி - தயவுடன் தகவலுக்காக
02. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு - தயவுடன் தகவலுக்காக
03. மேலதிக தேர்தல் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்) - தயவுடன் தகவலுக்காக
04. தலைமை நிதி அலுவலர் - உரிய அலுவலுக்காக
05. தலைமை உள்ளக கணக்காய்வாளர் - உரிய அலுவலுக்காக
06. கணக்காளர் (பெறுகைகள்) - ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் கோரப்படும் எரிபொருள் கட்டளை புத்தகங்களின் எண்ணிக்கையை கவனத்திற்கொண்டு பெற்றுக்கொடுப்பதற்கு.